**கல்வி அதிகாரியின் காரியாலயம்**

ஜனவரி 12 2010

அன்பான பெற்றோர்/பாதுகாவலர், நிர்வாக சபை ஊழியர்கள், மற்றும் காப்பாளர்கள் அறிவது,

பிரதேச ரீதியில் அனுமதி பெறப்பட்டு, செப்டெம்பர் 2010 முதல் முழுநேர முன்பள்ளிக் கற்றல் நிகழ்ச்சித்திட்டமானது, முதற்கட்டமாக அமுல்படுத்தப்படவுள்ள பாடசாலை விபரங்களை அறியத் தருவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். அவை வருமாறு:

| | |
|---|---|
| Blessed Kateri Tekakwitha Catholic School | Willowdale |
| Christ the King Catholic School | Etobicoke |
| Holy Child Catholic School | Rexdale |
| Holy Cross Catholic School | Toronto |
| Holy Family Catholic School | Toronto |
| Holy Name Catholic School | Toronto |
| Immaculate Conception Catholic School | North York |
| James Culnan Catholic School | Toronto |
| Our Lady of Guadalupe Catholic School | Willowdale |
| Precious Blood Catholic School | Scarborough |
| Sacred Heart Catholic School | Scarborough |
| Santa Maria Catholic School | York |
| St Angela Catholic School | Rexdale |
| St Anthony Catholic School | Toronto |
| St Antoine Daniel Catholic School | Willowdale |
| St Barbara Catholic School | Scarborough |
| St Charles Catholic School | Toronto |
| St Dunstan Catholic School | Scarborough |
| St Elizabeth Seton Catholic School | Scarborough |
| St Francis Xavier Catholic School | Toronto |
| St Ignatius of Loyola Catholic School | Scarborough |
| St John Bosco Catholic School | Toronto |
| St Leo Catholic School | Etobicoke |
| St Luke Catholic School | Toronto |
| St Martha Catholic School | Downsview |
| St Martin De Porres Catholic School | West Hill |
| St Maurice Catholic School | Weston |
| Stella Maris Catholic School | Toronto |

டிசெம்பர் 2009ல் அறியத் தந்த விபரங்களின் அடிப்படையில், செப்டெம்பர் 2015 வரையான காலப்பகுதிக்குள் ஒன்ராரியோ பகுதியைச் சார்ந்த சகல நிதியுதவி பெறும் ஆரம்பப் பாடசாலைகளிலும், முழுநேர முன்பள்ளிக் கற்றல் நிகழ்ச்சித்திட்டமானது, அமுழுக்கு வரும் என்பதை அறியத் தருகின்றேன். மேலே குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலைகள், இத்திட்டத்தின் முதற்கட்ட நடவடிக்கையாக சேர்த்துக் கொள்ளப்படடுள்ளன.

இம்முதற்கட்ட நடவடிக்கையின் வெற்றிகரமான அமுலாக்கத்திற்கும், எதிர்காலத்தில் இத்திட்டத்தில் இணைக்கப்படவுள்ள பாடசாலைகளின் திட்டமிடலுக்கும், நாம் பல்வேறு சவால்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது. இதற்காகப், பல புதிய திட்டங்களை உருவாக்கி அவற்றைச் செயற்படுத்தம் பொறுப்பு உருவாகியுள்ளது.

இத்திட்டமிடல் பற்றிய விபரங்கள் அனைத்தும், உங்களுக்கு உடனுக்குடன் அறியத் தரப்படும். மேலும், எமது நிர்வாக சபையானது சிறு பிள்ளைகளுக்கான, பல்வேறு வகையான நிகழ்ச்சித்திட்டங்களை வழங்கி வருகின்றது. அவற்றில், ஏற்கனவே அமுழில் உள்ள கத்தோலிக்கக் கல்வி அடிப்படையிலான, அரை நாள் சிறுவர் நிலைப் பள்ளி முறை, பாடசாலைக்குப் பிந்திய சேவைகள் (After-school programs), பெற்றோர் குடும்ப எழுத்தறி திறன் நிலையங்கள் (Parenting and Family Literacy Centres), ஆரம்ப கால மையங்கள் (Early Years Centres), சிறந்த ஆரம்ப மையங்கள் (Best Start Centres) என்பன அடங்கும்.

மேலே தரப்பட்டுள்ள சகல விபரங்களையும், நிர்வாக சபையின் www.tcdsb.org எனும் இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் பல்வேறு வகையான நிகழ்ச்சித்திட்டங்களின் விபரங்களையும், பெறுவதற்கு எமது இணையத்தளமானது சிறந்த இடமாகும்.

எதிர்வரும் கல்வியாண்டுகள், உங்கள் பிள்ளையின் வெற்றிக்கு வழிவகுக்கும் என்பதும், அதற்கான சந்தர்ப்பங்களையும் உருவாக்கித் தரும் என்பதிலும் ஐயமில்லை. மேலும், அவர்களுடைய இம் முன்னேற்றப் பாதையானது, பல அநுகூலமான அநுபவங்களையும் ஈட்டித்தரும் என்பதும் நிச்சயம்.

இங்ஙனம்,



ஆன் பெறன்

**கல்வி அதிகாரி**